பசிதாகமுடையவராக இருப்பதற்கே
நீங்கள் பாக்கியம்
பெற்றிருக்கிறீர்கள். ஏனெனில்
நீங்கள் அது வேண்டும் என்று
விரும்புகிறீர்கள், அதினால்
நீங்கள் பாக்கியவான்கள்.
ஏனெனில், அநேகர் அந்தப்
பரமகாரியம் வேண்டும் என்றே
விரும்புவதில்லை



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: வெளிப்படுத்தின விசேஷம் நான்காம் அதிகாரம் #2 இருபத்து நான்கு மூப்பர்கள்

## REVELATION CHAP. FOUR #2 TWENTY FOUR ELDERS

ஜனவரி 1, 1961 பிரான்ஹாம் கூடாரம், இந்தியானா, அமெரிக்கா

98. "இங்கே ஏறிவா" என்று அழைத்தது அந்த சத்தம் தான். அவன் திறந்த வாசலைக் கண்டபொழுது, அவன் எக்காளம் போன்ற சத்தத்தைக் கேட்டான். உடனே யோவான் ஆவிக்குள் ளானான். அவன் ஆவிக்குள்ளான

உடனேயே, காரியங்கள் நடைபெறுவதைக் காண ஆரம்பித்தான். **நீங்கள் ஆவிக்குள்ளான உடனே, மேலான காரியங்களைக் காண ஆரம்பிக்கிறீர்கள். முதலாவதாக நீங்கள் ஆவிக்குள்ளாகுங்கள்.** அது சரிதானே?

**99.** நீங்கள் ஒரு பந்து விளையாட்டுக்கு சென்றால், எனக்கு தளக் கட்டுப்பந்து விளையாட்டு **(Baseball).** நிச்சயமாக ரொம்ப பிடிக்கும்" என்று கூறுவீர்கள். நீங்கள் முன்வரிசை இருக்கை ஒன்றைப் பெற்றுக்கொண்டு, யாங்கீஸ் அல்லது புல்டாக் ஆகிய ஏதாவது

ஒரு குழுவினர் விளையாடுவதை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அங்கே அவர்கள் பெரிய விளையாட்டு ஒன்றை விளையாடுகிறார்கள்.

**100.** உங்களுடைய குழு தோற்கப் போகிற வேளையில் திடீரென அதற்கு வெற்றி வருகிறது என்றால், அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறவர்கள் யாவரும் குதிக்கிறார்கள், கத்துகிறார்கள், ஆதரவான மகிழ்ச்சியொலி எழுப்புகிறார்கள்.

**101.** நானே இவ்விளையாட்டு ஒன்றுக்குச் சென்று அவர்கள்

செய்வதையெல்லாம் பார்த்திருக்கிறேன். நான் ஒரு நாள் இந்த பேஸ் பால் என்ற பந்து விளையாட்டு ஒன்றுக்கு சென்றேன். அந்த விளையாட்டில் மட்டை பிடிப்பவர் ஒரு ஓட்டம் எடுக்கும்படி எல்லாத் தளத்தையும் தொடும்படி அடிக்கும் ஒரு அடியை **(home run)** அடித்தார். அப்பொழுது எனக்கு முன்பாக நாரினால் ஆன தொப்பியை அணிந்திருந்த ஒரு மனிதன் பரவசமடைந்தார், அவர் தன் தொப்பியை கையில் எடுத்துக் கொண்டு, தன் கழுத்துப் பட்டையை உயர்த்தி விட்டுக்

கொண்டு, அவருக்கு மிகவும் குதூகலமான வேளை உண்டாயிருந்தது. அவர்தான் என்ன செய்கிறோம் என்பதையே அறியாமல், தன்னையே மறந்து பரவச நிலையை எய்தினார். தன் காலால் உதைத்துக் கொண்டு, வெற்றியைக் குறித்து ஆரவாரத்தைச் செய்து கொண்டு, கத்திக் கொண்டும் குதித்துக் கொண்டும் இருந்தார். அவர் அப்பந்து விளையாட்டை மிகவும் நேசித்தார் என்று நான் கருதினேன். அதனால்தான் அப்படியெல்லாம் செய்தார். அவர் ஒரு பேஸ்பால் விளையாட்டு ரசிகர்.

எப்படி ஒரு சிகரெட் ரசிகர் அல்லது விஸ்கி ரசிகர் இருக்கிறாரோ, அதைப் போலத்தான்.

102. நான் இயேசுவின் மேல் மிகுந்த நேசம் கொண்டுள்ளவன். அவருடைய ரசிகன், நான் அதை நேசிக்கிறேன். இயேசுவின் மேல் பிரியங்கொண்டுள்ள ரசிகராக இருந்தால், நீங்கள் அதை அறிவீர்கள். எதன் பேரிலாவது ரசிகனாக இருப்பது.

103. எனவே, அப்பொழுது அந்த ஆள் "நான் ஒரு பேஸ்பால் விளையாட்டு ரசிகன்" என்று கூறுகிறதை உங்களால் கற்பனை

செய்து பார்க்க முடியும். அவனது குழு தோற்கப் போகிற கட்டத்தில் மறுபடியும் தலை நிமிர்ந்து, அது ஆட்டத்தை ஜெயித்து விட்ட தென்றால், அந்த மனிதனுக்கு இருக்கிற பெருமிதம் மிக அதிகம்.

”அவர் பேஸ்பால் விளையாட்டை நேசிக்கிறார். அவர் ஏதோ ஆகிவிட்டார்” என்று கூறுவர்.

**104.** “நீங்கள் அதை விரும்பவில்லை? ஏன்? உங்களிடத்தில் ஏதோ கோளாறு உள்ளது. ஒவ்வொரு நல்ல

பேஸ்பால் ....” என்று நீங்கள் கூறுவீர்கள்.

105. ’அந்த ஆளுக்கு என்ன நேரிட்டு விட்டது? அவரிடத்தில் ஏதோ தவறு உள்ளது. பாருங்கள், அங்கேயே அந்த ஆள் உணர்ச்சி வசப்படாமல் உட்கார்ந்திருக்கிறார்” என்று கூறுவீர்கள்.

106. இப்பொழுது இரண்டையும் இரண்டையும் ஒன்று சேருங்கள். இப்பொழுது பாருங்கள். **ஓ, நீங்கள் இயேசுவின் மேல் பிரிக்க முடியாத அளவுக்கு நேசம் கொண்டுள்ளவராக இருப்பின், அப்பொழுது,**

**தேவனுடைய வார்த்தைகளில் பரிசுத்த ஆவியானது தோய்ந்திருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து, அப்பொழுது, ஏதோ உள்ளிலிருந்து சத்தமிடுகிறது. ஓ, நீங்கள் மெய்மறந்த நிலையில் ஆகிவிடுகிறீர்கள்.**

107. இதை கூறுவதனால் இங்கே அருகாமையில் அமர்ந்திருக்கிற இம்மனிதர் என்னை மன்னிப்பார் என்று நான் நம்புகிறேன். உயரமாக கட்டுமஸ்தான கறுப்பு நிற தலை முடியையுடைய அவர் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். ஓர்

இரவில் ஹாலில் நின்று கொண்டிருந்தார், ஒரு உதவியை நாடி, அவருக்கு ஆசீர்வாதம் வேண்டி. அந்த இளைஞர் நிலை பரிதாபமாக இருந்தது, அவருக்கு மோசமான வேளை உண்டாயிருந்தது. அவருடைய மனைவி அவரை விட்டு பிரிந்து சென்று விட்டாள். அவரோடு விவாகரத்து கோரி வழக்கும் தொடர்ந்திருக்கிறாள். ஏனெனில் அவர் கர்த்தராகிய இயேசுவை மிகவும் நேசித்தார். **யாரோ அவரிடம் இயேசுவைப் பற்றி சில காரியங்கள் கூறியிருந்திருக்கிறார். அதினால் அவர் இயேசுவின் மேல்**

பிரியராகிவிட்டார். அவர் யுத்தத்தில் கலந்து கொண்டு, மேலெல்லாம் துப்பாக்கி சூடுபட்டவர்; திரும்பி வீட்டுக்கு வந்து மனைவி பிள்ளைகளோடு இருந்தார். அப்பொழுது, அவர் கர்த்தரிடம், தான் அவரை இனிமேல் சேவிப்பதாக வாக்குக் கொடுத்தார், அதிலிருந்து கர்த்தர் அவரை ஆசீர்வதிக்க ஆரம்பித்தார்; அவர் தேவனோடு தன் ஜீவியத்தை நேர்ப்படுத்திக் கொண்டார்; அதினால் அவரது மனைவி அவரை விட்டு விலகி, விவாகரத்து கோரி அவர் மேல் வழக்கு தொடர்ந்து, பெற்று, அவரை விட்டு

விலகினாள். அவரை தனிமையாக விட்டுவிட்டு அவள் விலகிவிட்டாள். ஆனால் இத்தனைக்கும் பிறகு அவர் பிரியராகவே தான் இருந்தார்.

108. ஓர் இரவில் அவர் அங்கே நின்று கொண்டிருக்கும் பொழுது, யாரோ ஒருவர் இயேசுவைப் பற்றி சில காரியங்களை அவரிடம் கூறி, அவர் எவ்வளவு பெரியவர் என்று கூறியிருக்கிறார். அதற்கு அவர் ’ஓ மகிமை” என்று கூறிக் கொண்டே தன் கரங்களை திடீரென்று உற்சாக மேலீட்டால் பெலத்தோடு சுவற்றைக் குத்தினார். அப்பொழுது அவரது கைமுஷ்டி சுவற்றில் பதிந்து

கொண்டு விட்டது. தான் என்ன செய்தோம் என்பதையே அவர் அறியவில்லை. அவரது கைமுஷ்டி சுவற்றில் பதிந்து கொண்டு விட்டது. ”சகோதரன் பில் அவர்களே, நான் இதற்கான கிரயத்தை செலுத்தி விடுகிறேன்” என்று கூறினார். அந்நேரத்தில் சகோதரன் வுட்ஸ் அவர்கள் வந்து, உடைந்து போன சுவற்றை பழுது பார்த்தார். சகோதரன் பென் அவர்களே, நாங்கள் அதைப்பற்றி வருத்தப்படவில்லை, நீங்கள் இயேசுவின்மேல் பிரியராயிருப்பதின் நிமித்தமாக நாங்கள்

மகிழ்ச்சியாயிருக்கிறோம்.

பாருங்கள்?

109. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஒரு காரியத்தைச் செய்யும் பொழுது, உங்களால் அமைதியாக உட்கார்ந்து இருக்க முடியாது, உங்களிலிருந்து ஏதோ பொங்கி பொங்கி வழிகிறது. ஆமென். வ்யூ! கிறிஸ்துவின் பிரியரை நிச்சயமாக ஒன்று பிடித்துக் கொள்கிறது. நீங்கள் கர்த்தரை நேசிக்கும் பொழுது, உங்களிலிருந்து ஏதோ ஒன்று புறப்பட்டு பற்றிக்கொள்ளுகிறது, கர்த்தருக்கென பசிதாகமுள்ளவராக ஆகிறீர்கள்.

"நீதியின் மேல் பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் நிரப்பப்படுவார்கள்" என்று இயேசு கூறினார்.

நீங்கள் அதைப் பெற்றிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நீங்கள் தாகமுடையவராக இருந்தால் கூட அதுவே போதுமானது.

எத்தனை பேர் இன்னும் அதிகமாக தேவனுடைய காரியங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறீர்களா?

நல்லது, தேவனுடையவற்றிலிருந்து

இன்னும் அதிகமாக நீங்கள் வேண்டுமென்று விரும்புவதின் காரணம் என்னவெனில், அவ்வாறு இருப்பதற்காக நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் அதைப் பெற்றிராத போதிலுங் கூட, நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டே இருக்கிறீர்கள்.

பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள். பசிதாகமுடையவராக இருப்பதற்கே நீங்கள் பாக்கியம் பெற்றிருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் அது

**வேண்டும் என்று விரும்புகிறீர்கள், அதினால் நீங்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அநேகர் அந்தப் பரமகாரியம் வேண்டும் என்றே விரும்புவதில்லை.**

110. அன்று இரவிலே நான் கொடுத்த என்னுடைய பிரசங்கத்தை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? மனவளர்ச்சி மூளை வளர்ச்சி குன்றிய ஒரு மனிதன் பரிசுப் பொருளையுடைய பெட்டியை வைத்துக்கொண்டு, அதினுள் இருந்த பரிசுப்பொருளை வீசி எறிந்தானே! பார்த்தீர்களா? **பரிசு வைக்கப்பட்ட பெட்டி**

**வேண்டாம், பரிசை எடுத்துக்கொள்ளுங்கள். சரி.**

**"உடனே ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்தின் மேல் ஒருவர் வீற்றிருந்தார்."**

**வெளி. 4:2**